## பெருநகர சென்னை மாநகராட்சி

## செய்தி வெளியீடு

**செ.வெ.எண்.06** **நாள் : 07.01.2025**

**பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் 59 வாகனங்கள் மற்றும் இயந்திரங்களைக் கொண்டு தீவிரமாக கட்டடக் கழிவுகளை அகற்றும் தூய்மைப் பணியினை மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் இன்று கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள கட்டடக் கழிவுகளை அகற்றும் வகையில், முதற்கட்டமாக தண்டையார்பேட்டை, இராயபுரம், திரு.வி.க. நகர், அண்ணாநகர், தேனாம்பேட்டை, கோடம்பாக்கம் மற்றும் அடையாறு ஆகிய 7 மண்டலங்களில் 59 வாகனங்கள் மற்றும் இயந்திரங்களைக் கொண்டு தீவிரமாக கட்டடக் கழிவுகளை அகற்றும் தூய்மைப் பணியினை மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் இன்று (07.01.2025) ரிப்பன் கட்டட வளாகத்தில் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் பேருந்து சாலைகள் மற்றும் உட்புறச் சாலைகள், பூங்காக்கள், மயானபூமிகள் மற்றும் பேருந்து நிறுத்தங்களில் தீவிரத் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, குப்பைகள் மற்றும் கட்டடக் கழிவுகள் அகற்றப்பட்டு, தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

மேலும், கட்டடக் கழிவுகளை பொது இடங்களில் கொட்டுவதைத் தவிர்க்கும் வகையில், 15 மண்டலங்களிலும் இடம் நிர்ணயம் செய்யப்பட்டு, அவ்விடங்களில் மட்டுமே கட்டடக் கழிவுகளை கொட்டிட பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் தண்டையார்பேட்டை, இராயபுரம், திரு.வி.க. நகர், அண்ணாநகர், தேனாம்பேட்டை, கோடம்பாக்கம் மற்றும் அடையாறு ஆகிய 7 மண்டலங்கள் முழுவதும் சாலைகள் மற்றும் தெருக்களில் உள்ள கட்டடக் கழிவுகள் 59 வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் மூலம் தீவிரமாக அகற்றப்பட்டு, அந்தந்த மண்டலங்களில் நிர்ணயிக்கப்பட்ட இடங்களில் சேகரித்து, பின்னர் பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகங்களுக்கு கொண்டு செல்லப்படும். இந்தப் பணிகளுக்காக 2 கனமீட்டர் கொள்ளளவு கொண்ட 13 வாகனங்கள், 5 கனமீட்டர் கொள்ளளவு கொண்ட 8 வாகனங்கள், 8 பாப்காட் வாகனங்கள், 15 டிப்பர் லாரிகள், 15 ஜே.சி.பி. வாகனங்கள் என மொத்தம் 59 வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகிறது. இப்பணிகள் இந்த மண்டலங்களில் இரண்டு வார காலத்தில் மேற்கொள்ளப்பட்டு கட்டடக் கழிவுகள் அகற்றப்படும்.

இதனைத் தொடர்ந்து, இரண்டாம் கட்டமாக திருவொற்றியூர், மணலி, மாதவரம், அம்பத்தூர், வளசரவாக்கம், ஆலந்தூர், பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய 8 மண்டலங்களில் தீவிரமாக கட்டடக் கழிவுகளை அகற்றும் தூய்மைப் பணி மேற்கொள்ளப்படும்.

இந்நிகழ்ச்சியில், ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, கண்காணிப்புப் பொறியாளர் (திடக்கழிவு மேலாண்மை) திரு.கே.விஜயகுமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**